உ
ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நம



யாழ்ப்பாணம், சாவகச்சேரி மட்டுவிலைப் பிறப்பிடமாகவும்
திருநெல்வேலியை வசிப்பிடமாகக் கொண்டவரும் விஸ்வகர்மப்
பிராம்மண மரபுதித்தவருமான

அமரர்

# திருமதி. அன்னரத்தினம் தம்பிராசா

அவர்களின்

# நினைவு மலர்

25.01.2004

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நம



யாழ்ப்பாணம், சாவகச்சேரி மட்டுவிலை பிறப்பிடமாகவும், திருநெல்வேலியை வசிப்பிடமாகக் கொண்டவரும் விஸ்வகர்ம பிராம்மண மரபுதித்தவருமான

அமரர்

# திருமதி. அன்னரத்தினம் தம்பிராசா

அவர்களின்

சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

25-01-2004

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்





எமது குடும்ப விளக்காக

ஒளிவீசி மறைந்த

எம் அன்புத் தெய்வத்தின்

பாதபங்கயங்களுக்கு


இம்மலரை

பணிவன்புடன்

சமர்ப்பிக்கின்றோம்.

**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# திருமதி. அன்னரத்தினம் தம்பிராசா

அவர்கள்

| பிறப்பு | மறைவு |
|---|---|
| 12.06.1929 | 26.12.2003 |

## திதி நிர்ணயம்

தென் தமிழ் சுபானு ஆண்டதனில்
தென்னயனம் கூம்பும் திங்கள் திகழ் மார்கழியில்
திருவோண மீனுடன் வளர்பிறைச் சதுர்த்தியில்
அன்னரத்தின மாது அரனடி சேர்ந்தனளே விரைந்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோத்திரப் பாடல்கள்



திருச்சிற்றம்பலம்

## தேவாரம்

உண்ணாமுலை உமையாளொடு
முடனாகிய யொருவன்
பெண்ணாகிய பெருமான்மலை
திருமாமணி திகழ
மண்ணார்ந்தன வருவிந்திரண்
மழலைம் முழவதிரும்
அண்ணாமலை தொழுவார் வினை
வழுவா வண்ணமறுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

ஏர்தரும் எவ்வுலகும் தொழுதேத்த எவ்வுருவும் தன்னுருவாயி
ஆர்கலி சூழ் தென்னிலங்கை அழகமர் மண்டோதரிக்கு
பேர் அருள் இன்பழித்த பெருந்துறை மேயபிரானைச்
சீரியவாயால் கூவாயோ குயிலே தென்பாண்டி நாடனையே

## திருவிசைப்பா

பக்தியாய் உணர்வோர் அருளைவாய் மடுத்துப்
பருகுதோ றமுதமொத்தவர்க்கே
தித்தியா விருக்குந் தேவர்காள் இவர் தந்
திருவுரு இருந்தவாறு பாரீர்
சத்தியாய் சிவமாய் உலகெலாம் படைத்த
தனிமுழு முதலுமாய் அதற்கோர்
வித்துமாய் ஆரூர் ஆதியாய் வீதி
விடங்கராய் நடங்குவாவினரே

## திருப்பல்லாண்டு

மிண்டு மனத்தவர் போமின்கள்
மெய்யடியார்கள் விரைந்து வம்மின்
கொண்டுங் கொடுத்துங் குடிகுடி
ஈசற் காட் செய்மின் குழாம்புகுந்து
அண்டங் கடந்த பொருள் அளவில்லதோர்
ஆனந்த வெள்ளப் பொருள்
பண்டும் இன்றும் என்றும் உள்ளபொரு
ளென்றே பல்லாண்டு கூறுதுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்புராணம்

பொன் பூத்த நிறமாய னிலமிடத்து
மறிவருதாட் புனிதமூர்த்தி
மின் பூத்த திருமேனி மேவியுயரைந்
தொழிலு மகிழ்வினாற்றி
மன் பூத்த வடியர் வினை யொழித் தொழியா
வின்ப நலம் மேவி வாழத்
தெள் பூத்த வருள் சுரக்கும் விச்வநாயகி
மலர்த்தாள் சென்னி வைப்பாம்

# திருப்புகழ்

அபசார நிந்தை பட்டுழலாதே
அறியாத வஞ்சரைக் குறியாதே
உபதேச மந்திரப் பொருளாலே
யுனைநா னினைந்தருள் பெறுவேனோ
இபமா முகறனக் கிளையோனே
இமவான் மடந்தை யுத்தமி பாலா
செபமாலை தந்த சற்குருநாதா
திருவாவினன் குடி பெருமாளே

# வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க
நான்மறை அறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் திருமதி. அன்னரத்தினம் தம்பிராசா
அவர்களின்

# வாழ்க்கையின் சில தடங்கள்

ஈழமணித் திருநாட்டின் சிரமெனவே வரும் புண்ணிய மோங்கிடும் யாழ்ப்பாணத் திருமண்ணில் தென்மராட்சி பெரும் பிரிவில் சாவகச்சேரி பட்டணத்திற்கு அருங்கில் கள்னலும், கமுகும், தென்னையும், பலாவும் செந் நெல்லும் நிறைந்திலங்கும் பதி மட்டுவில். அப்பகுதியை நினைக்குந் தோறும் முதலில் நினைவுக்கு வருவது பன்றித்தலைச்சி கண்ணகி அம்பாள் ஆலயமே. அவ்வாலய மருங்கில் சிவன் கோவில் வீதியில்,

"தொழிலறிவானர் சுருதி கண்ணாகத்
பழுதறியாத பரம குரவோர்
வழியறிவார் நல்ல வழியறிவாளர்
அழிவறிவார் மற்றையல்லாதாரே" என திருமூலர் விதந்தேத்தும் உலகக் குருமாராம் கண்ணாளர் மரபிலே வந்த சின்னத்தம்பி எனும் சீரியோனுக்கும் அவர் இல்லக்கிழந்தி ஆச்சிமுத்து எனும் மங்கை நல்லாளுக்கும் அவர் தம் அருந்தவப் பயனாய் ஆயிரத்துத் தொளாயிரத்து இருபத்தொன்பதாம் ஆண்டு ஆனித்திங்கள் பன்னிரண்டாம் நாள் ஆயிலிய நட்சத்திரத்தில் ஓர் பெண்மகவு உதித்தது. அம்மகவுக்கு அன்னரத்தினம் எனும் சொர்ணரத்தினப் பெயர் சூட்டி மகிழ்ந்தனர் பெற்றோர்.

அன்னரத்தினம் எனும் அருந்தவச் செல்வம் நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாய் வளர்ந்து வந்தார். கல்வி, கேள்விகளில் சிறந்து வந்தார். தனது பெரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தையாரின் புதல்வரான இளவல் கந்தை கிருஷ்ணருடன் இணைந்து வளர்ந்தார். தனது சகோதரன் மீது அன்பைச் சொரிந்து வந்தார். இளமையிலேயே உறவினர்களில் யார் யாருக்கு உதவிதேவை என உணர்ந்து ஆற்றும் பண்பைக் கொண்ட அவர் முகமலர்ச்சியுடன் ஆதரித்து அக மகிழ்வது தனிச்சிறப்பு. வளர்ந்து கன்னிகையான வேளையில் பெற்றோர் உடுவிலம்பதியைச் சேர்ந்த ஒத்தகுலனும் நலனுமுள்ளவரும் சின்னத்தம்பி தையல்முத்து தம்பதியரின் மகனுமான கலைத்தொழிற் சிறப்புமிக்க தம்பிராசாவை மணாளனாகக் கண்டு மணவினை காண்கின்றனர்.

மணமக்களின் இல்லறமென்னும் நல்லறத்தின் பயனாக கோபாலகிருஷ்ணன், கதிர்காமநாதன், தேவராணி, கணேசலிங்கம், சிவராணி ஆகியோர் பிள்ளைக்கலி தீர்க்கும் செல்வங்களாகத் தோன்றி பெருமை தந்தனர். "தோன்றில் புகழொடு தோன்றுக அஃதிலர் தோன்றில் தோன்றாமை நன்று" எனும் வள்ளுவர் வாய்மொழிக்கு இணங்க கற்றோரும், மற்றோரும் போற்ற வளர்ந்து கல்வி, தொழில், தெய்வபக்தி, சான்றாண்மை, நேர்மை, மனவுறுதி ஆகியன மிளிர நன்மக்களாக வாழவைத்தனர் அன்னரத்தினமும் அவர் தம் கணவரும்.

மூத்த மகனாகிய கோபாலகிருஷ்ணனுக்கு, வரணியைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை வேதநாயகி தம்பதியினரின் மகளாகிய திலகவதியை திருமணம் செய்வித்து, அவர்கள் வழியே தக்ஷாமினி எனும் பேர்த்தியை பெற்று மகிழ்ந்தனர். கோபாலகிருஷ்ணன் தொழில் நிமித்தம் சவுதி அரேபியாவில் உள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாவது மகன் கதிர்காமநாதனை சாவகச்சேரியைச் சேர்ந்த தர்மலிங்கம் விசாலாட்சி தம்பதியரின் மகளாகிய தர்மபூபதியை மணம் முடிப்பித்து நிறஞ்சன், விஜோஜன், கார்த்திகன் ஆகிய பேரக் குழந்தைகளை பெற்று மகிழ்ந்தனர். கதிர்காமநாதன் தொழில்வளம் நிரம்பப்பெற்று சாவகச்சேரியில் வாழ்கின்றார்.

அன்னரத்தினத்தின் தாய்வழி உறவுத் தொடர்புடைய ஊர் கலைத்திறலோர் நிறைந்திலங்கும் திருநெல்வேலி அவ்வூரின் கண் வாழ்ந்த சிவனடியார் செல்லக்கண்டு தம்பதியரின் இளைய மகன் தர்மகுமாரை மூத்த புதல்வி தேவராணிக்கு வரனாக வரித்து அகங்குளிர்ந்தனர். அவர்கள் வழியே அருண்சாந், ஷாழினி, லாகினி ஆகிய பேரர்களைப் பெற்று பேருவகை கொண்டனர். சவுதிஅரேபியா சென்று தொழில் புரிந்து இன்று தம் இல்லத்திலேயே கம்மாலயம் அமைத்து தொழில் ஆற்றுகின்றார்.

இளைய மகன் கணேசலிங்கத்திற்கு திருநெல்வேலியைச் சேர்ந்தவரும் அன்னரத்தினத்தின் மைத்துனியுமான சிவசம்பு மனோன்மணி தம்பதியரின் சிரேஷ்ட புத்திரி உதயராணியை மணம் முடித்து அவர் தம் புதல்வர்களான ஆரபி, மயூரன் ஆகியோரை பேரச் செல்வங்களாக பெற்று பெரிதும் உவந்தனர். அக்குடும்பத்தினர் ஜேர்மனி தேசத்தில் வாழ்கின்றனர்.

இளைய புதல்வி சிவராணியை நீராவியடியைச் சேர்ந்த தர்மலிங்கம் பாக்கியம் தம்பதியரின் புதல்வரான தேவபாலனுடன் பாணிக்கிரகணம் செய்து அதன் விளைவாய் ஆதித்திகா, மதுரிகா, தேனுகா ஆகிய பேரச்செல்வங்களைப் பெற்று மகிழ்ந்தனர். அவர்கள் டென்மார்க்கில் வதிகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு தம் குடும்பம் சிறப்புற வாழ வழிவகுத்த எம் மன்னை கடவுள் பக்தியிலும், உற்றவர்க்கு உதவி செய்வதிலும் இளமை தொட்டே சிறந்து விளங்கினார். "மருந்தெனினும் விருந்தோடு உண்" எனும் அருமந்த கருத்திற்கு உடன்பாடானவர்.

விஸ்வகர்மப் பிராமணர்கள் தம் பஞ்சகிருத்தியங்களுக்கு மூலத் தெய்வமாகவும் குல தெய்வமாகவும் ஆதி பராசக்தியின் எல்லா வித்தைகளையும் பொதுவாகவும் பரதேவதை காயத்திரி, முதல் அவதாரமான பத்திரகாளி, முக்கிய வடிவமான காளிகாசொரூபிணி காமாட்சி ஆகிய வித்தைகளை சிறப்பாகவும் வழிபடுவர். அந்த வகையில் அன்னரத்தினமும் அவர் முன்னோரும் தம் வளவிலேயே பத்திரகாளிக்கு (காமாட்சி சொரூபிணி) ஆலயம் அமைத்து போற்றி வழிபட்டனர். "எத்திறம்ஈசன் நிற்பன் அத்திறம் அவளும் நிற்பள்" எனும் சித்தியார் திருமொழிக்கு ஏற்ப உமையவள் பத்திரகாளி ஆக, பரசிவன் வீரபத்திரர் ஆனார். அன்னையுடன் வீரபத்திர சிவனார் ஆலயம் அவர் தம் குமாரர் ஆலயமான கந்தசுவாமி கோவில், கண்ணகி வழிபடும் பராசக்தி வழிபாடும் இணைந்த பன்றித்தலைச்சியாள் சந்நிதி ஆகியவற்றுக்குச் சென்று வழிபடும் நியமம் பூண்டவர் அன்னரத்தினம்.

பெற்றோரின் அன்பிலும் பாட்டன், பாட்டியர் அன்பே அதிகமானது என்பார்கள். அவ்வாறே பேரப்பிள்ளைகள் மீது மிகுந்த அன்பைச் சொரிவார் எம் அன்னை.

உற்றார், உறவினர்கள், நண்பர்கள், எதிலியார், விருந்தினர் யாவரையும் அரவணைத்து உபசரிப்பார். "இருந்தோம்பி இல் வாழ்வதெல்லாம் விருந்தோம்பி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேளாண்மை செய்தற் பொருட்டு" என்ற பொய்யாமொழிக்கு ஏற்ப நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக வலிகாமம் பகுதியிலிருந்து (1987) இடம் பெயர்ந்து அவர் இல்லத்திற்கு சென்றவர்களை உள்ளன்போடும் முகமலர்ச்சி யோடும் உபசரித்ததை பலரும் நினைவு கூர்வர்.

குடும்பத்தை நிர்வாகம் செய்த அவரை கடந்த சில வருடங்களாக நோய் நிர்வாகம் செய்து வந்தது. படுக்கையில் வீழ்ந்த அவரை அவரது புதல்வி தேவராணியும் சட்டப்படி மகனான (மருமகன்) தர்மகுமாரும் தர்மப்படி மகனாகி தம் குடும்பத்தை கண்களை இமை காப்பது போல் காத்து நின்ற அன்னையை தாமும் காத்து நின்றனர். அவர்கள் தன்னை போஷித்தது போதுமென்றோ என்னவோ அன்னரத்தினம் என்ற அகல்விளக்கு சுபானு வருடம் மார்கழி மாதம் வெள்ளிக்கிழமை 11ம் நாள் (26.12.2003) விநாயகர் சஷ்டியின் 19ம் நாளான சதுர்த்தி திதியில் நண்பகல் கூம்பி மாலை அலரும் வேளையில் அகண்ட விளக்கான பராசக்தி சகித பரமசிவனாரின் பாதங்களை சென்றடைந்தது.

அன்னையின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போம்.

***சாந்தி! சாந்தி!! சாந்தி!!!***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரலாபம்

காதலன் ஒருவனைக் கைப்பிடித்து - அவன்
காரியம் யாவினும் கைகொடுத்த - காரிகையென
வீரியத்துடன் நம் செல்வங்கள் வாழ வழிவகுத்த-நங்காய்
வள்ளுவனின் வாசுகிபோல் பேதலிக்கவே
என்னைவிட்டு பெருமானின் தாழிணையைத்
நாடி தாவினையோ - என் நெஞ்சம்
தடுமாறிக் கொதிக்குதே தழலாக
என் கூட்டில் உயிர்சுமந்து தானே

**கணவன்**
**சி. தம்பிராசா**

ஐயிரண்டு திங்களாய் அங்கமெல்லாம் நொந்
தெமைப் பெற்ற ஆரமுதே - பையல்கள் நமை
பாரினிற் சான்றோராய் ஆக்கி வைத்த
தூயவளே எம் தாயே எப்போ காண்போம் இனி.

**பிள்ளைகள்**

அலை கடல் கடந்து அன்னிய மண்ணில் நாம் இருந்தபோதும் -உன்
அன்புக் கடற்பெருக்கு எமை ஆதரிக்கும் பெருஞ்சக்தி
இகமதிலே அதையிழந்து திகைக்கின்றோம் நாமிங்கு
பரந்தேடி சென்றதேனோ பரிதவிக்க எம்மை விட்டே

**பிள்ளைகள்**
**த. கோபாலகிருஷ்ணன் (சவுதி),**
**த.கணேசலிங்கம் (ஜேர்மனி),**
**தே. சிவராணி (டென்மார்க்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகத்தில் எல்லாவுறவும் உண்நோக்கம் கொண்டதுதான்
உண்நோக்கம் இல்லாத ஒருறவு தாயுறவே
அவ்வுறவின் அருளுணர்வால் அரும்பணிகள்
ஆற்றியவுனக்கு இறுதி காரியங்கள் ஆற்றும் நாள்
கடுகித்தான் வந்தனோ.

**மகன்**
**கதிர்காமநாதன்**

அன்பு அறிவு செல்வமெல்லாம் அள்ளித்தந்தாய்
அடக்கத்தின் இலக்கணத்தைப் போதித்தாயே
உறக்கமின்றி எமக்காக உழைத் தாய் - அம்மா
மறக்கமனம் எனக்கேதம்மா வுந்தன் மதிமுகத்தை எந்நாளுமே

எம்பாரம் எல்லாம் நின்தன் உதரத்தில் சுமந்ததாயே
நின்பாரந் தனைச் சுமக்கும் நியதியை எனக்கீந்தாயே
அப்பாரம் தாங்கவென்னால் இயலாதென்றெண்ணித்தானோ
அம்பரனார் பாதம் தேடியோடி அமர்ந்திட்டாயோ?

**மகள்**
**தேவராணி**

சட்டப்படி வந்த மக்களே மருமக்கள் எனும்
சான்றுக்கு வடிவு தந்த மாமி- மட்டில்லா
மகிழ்ச்சி தனை எமக்கீந்தாய் - உனக்கென்ன
மாறுசெய்தோம் ஓடிவிட்டீர் நம்மை விட்டே

**மருமக்கள்**
**சி.தர்மகுமார், கோ.திலகவதி**
**க.தர்மபூபதி, க.உதயராணி,**
**த.தேவபாலன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருவி வந்த மக்களே மருமக்கள் எனும்
மாறில்லா உண்மையினை மனத்தே வைத்தெமக்கு
மாதாவாய் நின்றெம்மை மகிழ்வித்தாயே
மாநிலத்தில் அம்மகிழ்வைத் தருவார் இனியாரோ மாமி

**மருமக்கள்**

பெரிய தாயும் சிறிய தாயும் பெற்றதாயே எனப்
பேதமேதும் காணவொண்ணாமல் இருந்தீர் நீங்கள்
நட்டாற்றில் நிற்பது போல் நாங்கள் ஏங்க
நடைப்பயணம் கொண்டதேனோ அம்மா இன்று.

**பெறாமக்கள்**

கதைகள் பல கூறிஎமை மகிழ்விப்பாயே - எம்
கனிமொழிகள் கேட்டுநீ யின்புற்றாயே - நம்
கண்ணீரைக் கண்டபோது துன்புற்றாயே - இன்றெமை
கவனிக்காமல் உன்வழியில் நடந்திட்டாய் அப்பம்மாவே
கன்றினைப் பேணும் பசுப்போல
கவினுற எம்மைப்பேணி
கனிமொழி பலவும் கேட்டு
உவமையிலன்பை நல்கும்
உள்ளமே அம்மம்மாவின்
உள்ளமாகும் ஓயாத உந்தன்பேச்சு
ஓய்ந்ததேன் ஒலிக்க
நீ மறந்ததேனோ

**பேரப்பிள்ளைகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறந்தது என்முன்னெனும் - அக்கா
பிரிவதில் ஏனிந்த முனைப்பு
மறந்துதான் போனாயோ நீ
மாசற்ற எனது அன்பை
கறந்தபால் முலைக்கேறாதெனினும்
கலங்குதே எனது நெஞ்சம்
அனலிடைப் பட்ட புழுப்போல்
அலறி நான் துடிக்கலாச்சே

**சகோதரன்**
**க. கிருஷ்ணர்**

பிறர் பிள்ளை தலை தடவ
தன் பிள்ளை தானே வளரும் எனும்
தவறாத வார்த்தையினை
தலைமேற் கொண்டு
உற்றவர்க்கும் உறவினர்க்கும்
உறுதுணையாயிருந்த மாது
கற்றவரும் மற்றவரும்கலங்கி நிற்க
வாரணனின் விரதநாளில் வானகம் போனதேனோ

**உற்றார், உறவினர், அயலவர், நண்பர்கள்**

## தேற்றம்

ஞாலம் சுழல காலம் சுழல்வதுபோல்
பூதலத்தில் பிறப்பிறப்பு சுழல்தானே - அச்சுழலே
நம் சிந்தனைக் கினியாள் செல்வரத்தின மாதைக்
கவர்ந்தெனவெண்ணிகலி தவிர்ப்போம்

*சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஸ்வகர்மப் பிராமணர் சுப அசுபக் கிரியைகளும் அவர்கள் ஆற்றவேண்டிய கடமைகளும் நெறிமுறைகளும்

சூரியனிலிருந்து பிரிந்து அநேக காலம் அனலாக கனன்று கொதித்த நிலவுலகு குளிர்ச்சியடைந்து கல்லாகி, மண்ணாகி உயிரினங்கள் வாழும் நிலைக்கு கனிந்தபோது, உயிர் கூட்டங்கள் தோன்றி வாழ்ந்த பெருநிலப்பரப்பு லெமூரியாக் கண்டம் எனப் போற்றப் படும் தென்னிலப் பரப்பாகும்.

அத்தென்நிலப் பரப்பிலே [(குமரிக்கண்டம், சமனகண்டம் (தென்பாலிமுகம்)] தோன்றியமாந்தன் தான் உலக மானிடத்தின் தாயினத்தினனான தமிழன். நாகரிக வளர்ச்சியின்றி இருந்த மனிதரை அவருள்ளும் அறிவு மேம்பாடுடைய ஓர் வர்க்கத்தினர்புழுக்களைப் பிடித்து வேட்டை வாழிக்குளவி தன்னைப் போல் ஆக்குவது போல் அறிவு மேம்பாடுடைய மக்களாக ஆக்கினர். அவ்வறிவு மேம்பட வழிகாட்டிய மக்களே விசுவகர்மப் பேரறிஞர் ஆவர்.

அவ்அறிஞர்கள் மக்களுக்கு வேண்டிய உணவு, உடை, உறையுள் ஆகியவற்றை ஆக்கி அளித்தனர். ஐவ்வகை நிலங்களை வகுத்து அவற்றின் என்னென்ன பயிர்கள் விளையும் எனக் கண்டு பிடித்ததுடன், புதிய விதைகள், தாவர வர்க்கங்களையும் கண்டு பிடித்தனர். இதற்கு முன்னர் விவசாயத்திற்கு வேண்டிய கருவிகளைச் செய்தளித்தனர். இதனால் தான் கம்பர் ஏரெழுபது என்ற நூலில் "காராளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமையெல்லாம் கண்ணாளர் கைத்தொழிலே" என்றார். மக்கள் போக்குவரத்திற்கு தேவையான கால், கலம், வானவூர்தி ஆகிய வாகனங்களைச் செய்ததுடன் இவ் உலகின்மயேந்திர ஜாலங்கள் சிற்ப மர்மங்கள், இரசாயன வித்தைகள் ஆகியவற்றை ஆய்ந்தறிந்தனர். அவற்றிற்கு காரணமான அரியபெரிய சக்தியை கண்டு அப்பரம்பொருளின் திருவுருவங்களையும் நல்கி, வானளாவிய கோயில்களையும் அமைத்து மக்களின் அறிவுப் படித்திறனுக்கு ஏற்ப வழிபாடுகள்,கிரியைகள் ஆகியவற்றையும் ஆக்கி அளித்தனர். கூத்து, மருத்துவம், விவசாயம், இலக்கியம், பௌதீகசாஸ்திரம், வானசாஸ்திரம் ஆகிய ஆயகலைகள் அறுபத்துநான்கையும் வெளியிட்டு நிர்வாகம் செய்ய அரசையும் தோற்றுவித்து இகபர வாழ்வுக்கு வித்தூன்றிய உலக குருமார்களாகவும் துலங்கினர்.

இவர்களின் தோற்றம் பற்றி வேதங்கள், ஆகமங்கள், சிற்பசாத்திரங்கள், ஸ்காந்தபுராணம், விஸ்வப்பிரம்ம புராணம், மாந்தைப்பள்ளு போன்றநூல்களில் கூறும் சாரத்திகளை நோக்குவோம்.இப் பிரபஞ்சத்தின்காரண பூதரான நாமரூபமற்ற சிவம் அல்லது இயவுள் அல்லது கடவுள் தனது சக்தியான பரையின் சேர்க்கையால் ஐம்முகப்பிரம்மாய் உருக்கொண்டார். அவரே விஸ்வகர்ம்மா எனப்படும் பரசிவம். அப் பரசிவத்தின் ஐந்து திருமுகங்களாவன சத்தியோசாதம், வாமவேதம், அகோரம், தற்புருஷம், ஈசானம். அம்முகங்கள் முறையே வான், காற்று, நெருப்பு,நிலம்,நீர் ஆகியவற்றின் நிறங்களான வெள்ளை, நீலம், சிவப்பு, மஞ்சள், பச்சை ஆகியன கொண்டு விளங்கும். அம்முகங்களிலிருந்து மனு எனப்படும் சானகரிஷியும், மயன் எனப்படும் சாதன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரிஷியும் துவட்டா எனப்படும் அபூவனரிஷியும், சிற்பி எனும் பிரத்தியன ரிஷியும் விஸ்வெக்ஞன் எனும் சுவர்ண ரிஷியும் தோன்றினார்கள். இவர்கள் முறையே இருக்கு, யசுர்,சாமம், அதர்வணம், பிரணவம் ஆகிய 5 வேதங்களால் இறைவனைத் துதித்தனர். இவர்கள் வழியே பிரம்ம வித்துகளான விஸ்வகர்ம பிராம்மணர்கள் உருவானார்கள்.

இவர்கள் தொழிலுக்கு காரண பூதர்கள் மட்டுமன்றி வழிகாட்டிகளாகவும் பிரம்மாச்சம் பொருந்தியவர்களாகவும் விளங்குவதால் பூசைகள் அனுட்டானங்கள், தூய பழக்க வொழுக்கங்களையும் பூர்வந்தொட்டு கடைப்பிடித்து வந்தார்கள். ஆனால் தற்போது இவற்றில் அவர்களின் நிலை தாழ்ந்துள்ளமை மறைக்கவோ மறுக்கவோ முடியாத உண்மை. கௌமார சங்கிதை என்ற சிற்ப நூல் கலியுகம் தொடக்க காலங்களில் அவர்களின் நிலைதாழத் தொடங்கி கலியுக வருஷம் 5000 இன் பின் மீண்டும் தம் பூர்வ மேன்மையை அடைவர் எனக் கூறியுள்ளது. கலியுக வருஷம் 5105இல் "ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்" என்பதை உணர்ந்தொழுக வேண்டிய காலம் கனிந்து விட்டது. தம்மரபுக்குரிய கடமைகள், கிரியைகளை ஆற்ற முன்னர் நித்திய விரதமான புலால்மறுப்பு, குடிவகை மறுப்பு என்பவற்றை கட்டாயம் பேண வேண்டும் ஏனெனில் மற்றவர்கட்கு வழிகாட்ட வேண்டியவர்கள் வழிதவறி, திசை மாறி தாழ்ந்த நிலைக்கு தள்ளப்படுவது துரதிஷ்டமானது. இவர்களை "கொர்ப்பப்பிராம்மணர்" என யசுர் வேதம் கூறும். "விஸ்வகர்மகுலேயாத கொர்ப்பப்பிராம்மண நிச்சயம் சூத்திரத்துவம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாஸ்திதத்வம்சே ப்ராம்மணோ விஸ்வகர்மண" என அச்சுலோகம் கூறும்.

விஸ்வகர்மர்கள் பிறப்புக்கு முன்னர் தொடங்கி இறப்பிற்கு பின்னர் வரை செய்யவேண்டிய கருமங்கள் நூல்களில் அறிதியிட்டுக் கூறப்பட்டுள்ளன. உபயநயனம் வரையுள்ள கடமைகளை ஸ்காந்த புராணம், நாகர காண்டம் விபரித்துள்ள சுலோகங்களின் பொருள் மட்டும் இங்கு தரப்படுகிறது. பரமசிவன் - முருகன் இடையேயான கேள்வி பதிலாக இது அமைந்துள்ளது. எல்லாவற்றையும் இரட்சித்து, யாவும் தெரிந்து விளங்கும்உலகிற்கு இறைவனாகிய சுவாமி! இரத காரர்களுக்கு கர்பதானாதி கர்மங்கள் எவ் விதத்தில் செய்ய வேண்டும்?அதை அருளிச் செய்தல் வேண்டுமென்று குமாரசுவாமி வினவ அதற்கு ஸ்ரீ பரமேஸ்வரர் இங்ஙனம் அருள்வதானார்.

ஓ குமாரனே உலகத்திற்கு இதமாகச் சொல்லுகிறேன். இரதகாரர்கள் ஐவரும் விஸ்வகர்மாவின் சந்ததியார்களே. அந்த வம்சத்தாரெல்லோரும்வேதவழியாகவே எல்லாச் சமஸ்காரங்களும் செய்யவேண்டும். கர்பாதானம், பும்ஸவனம், சீமந்தோந்நயனம் (வளைகாப்பு) ஜாதகர்மம், உபநிஷ்க்ரமணம், அன்னபிராசனம் (பால்பருக்கு), சௌளம், உபநயனம் (பூணூல் பூணுதல்) முதலியனவைகள். முக்கியமாய் வேதமார்க்கமாகவே செய்ய வேண்டும். அந்த உபநயனம் புனர்ஜன்மரூபமானது. அதுவே இரண்டாம் பிறப்பாகும். அதைக் கர்பம் முதல் எட்டாம் வருடத்தில் ஆச்சாரியன் சாவதான சித்தமுடையவனாக விருந்து செய்யவேண்டும் என்று கூறப்படுவதால் இவர்கள் வேதாதிகாரமுடையவர்களென்றும் இவர்களுக்கு இரதகாரர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று மற்றொரு பெயரும் கூறப்படுவதால் இவர்களே முதன்மையான விஸ்வகர்மப் பிராம்மண இரதகாரர்களுமாவர் என்பதும் அறியத்தக்கதாகும்.

இன்னும் யாபேருக்கும் பிரம்ம முத்திரையான தாலியை செய்தளிப்பவர்களான விஸ்வைக்கியரான விஸ்வகர்மர்களும் வேத மார்க்கமாக திருமண நிகழ்வினைச் செய்வர். இன்றும் யாழ்ப்பாண நகரப் பகுதியில் நாகவல்லி வைபவம் என்ற நிகழ்வு மணவினைத்தொடரில் மேற்கொள்ளப்படுகிறது. அதில் மனு முதலாம் சனாகதி ரிஷி தம்பதிகள் எழுந்தருளி இருப்பதாக கருதி, ஐந்து தம்பதிகள் எழுந்தருளிச் செய்யப்படுகின்றனர்.

இறப்பின் போது பத்து நாட்களுக்கு கிரியைகளைச் செய்தவர் விரதம் அனுஷ்டித்து 11ம் நாள் அந்தியேட்டி, தர்ப்பணம், புண்ணியாகம் போன்ற கிரியைகள் நிறைவேற்றி ஆலயம்சென்று இறைவனை வழிபடல் விசுவகர்மருக்கு விதிக்கப்பட்டதாகும். எல்லாக் காரியங்கள் வேதமார்க்கமாகவும் தூய்மையுடன் ஆற்றப்பட வேண்டும். பின்னர் மாசிகம், திவஷம் போன்ற கிரியைகள் உரிய காலங்களில் நிறைவேற்றப்படல் வேண்டும்.

கிரியைகளை செய்வது ஒழுக்க நெறிமுறைகளைப் பேணுவதுடன் ஒற்றுமையை பேணுவதும் தம்முன்னோர்கள் ஆக்கி அளித்த அறிவுச் செல்வங்களை கற்றலும் அதன்படி ஒழுகல் அவர்கள் கடமையாகும். ஒருவருடைய திறமையை மற்றோர் பாராட்ட வேண்டும். மற்றவருடைய கல்வி, தொழில், சம்பந்தமான விடயங்களில் உதவி உற்சாகமூட்டல் ஆகியவற்றை காய்தல் உவத்தலின்றி மேற்கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னோர் அளித்த சிற்ப நூல்களில் இன்றைய விஞ்ஞானத்தை விஞ்சும் அறிவுப் பொக்கிஷங்கள் பொதிந்துள்ளன. அவற்றை அறிந்து கொள்ளவும்சமகால வாழ்க்கைச் சூழலுக்கு முகங்கொடுக்கவும் தமிழ், வடமொழி, சர்வதேச மொழியாக பரிணமித்துள்ள ஆங்கிலம் ஆகிய மொழிகளில் தேர்ச்சியும் பரீட்சையும் அவசியமாகும். எம் தமிழ்ச் செல்வங்கள் பல இன்று வடமொழியான சமஸ்கிருதத்தி லுள்ளன. எமது தாய் மொழியிலுள்ள அரிய பெரிய விடயங்கள் இன்று வெளிவரத் தொடங்கியுள்ளன.

சரஸ்வதி மகால் (தஞ்சாவூர்) நூல்நிலையத்திலிருந்து முதல் இடைசங்க கால கலைத்தமிழ் நூல்கள் ஏட்டுப் பிரதிகளாக மீட்கப்பட்டுள்ளன. அவற்றில் அணுவிஞ்ஞானம், சிற்பம், ஓவியம், கட்டிடம், மருத்துவம், உயிரியல், உளவியல், விண்ணியல் விஞ்ஞானம் சம்பந்தமான நூல்கள் அடங்கியுள்ளன. தெய்வக் கம்பியன் மயனால் எழுதப்பெற்றது ஐந்திறம், சிற்ப செந்நூல், ஓவியச் செந்நூல், கட்டிடச் செந்நூல், நிலைமனைச் செந்நூல், மனைநிலைச் செந்நூல், கணிதமாச் செந்நூல், மரக்கலச் செந்நூல், விண்கலச் செந்நூல், பெருநடச் செந்நூல், ஏழிசைச் செந்நூல், வானியற் செந்நூல், தமிழியற் செந்நூல்எனப் 13 நூல்களாகும். மயன்கலைத் தமிழ்ப்பாடல்கள் மட்டும் 2½ லட்சம் பாடல்கள். இவை நிலந்தருதிருவிற் மாண்டியன் மனுவின் முதல், இடைச்சங்கத்தில் நிறைவேற்றப் பட்டது. இதில் ஐந்திறம் தொல்காப்பியத்திற்கு வழிகாட்டிய தொல் தமிழிலக்கணம். இதை விட ஐந்தாவது வேதமான பிரணவ வேதமும் தமிழில் கிடைத்துள்ளன. ஐந்திறம்1986ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசால் வெளியிடப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம் அறிவுச் செல்வங்கள் பற்றியும், தொல்லியல் சின்னங்கள் பற்றி ஆராய்ச்சிகளும் ஆங்கில மொழியில் நூல்களாக வெளிவந்துள்ளன. எனவே நம் முன்னோர்கள் போல மேன்னிலை அடைய மும்மொழித் தேர்ச்சியும் அவசியம் என்பது புலனாகும்.

தமிழ்ச் சமுதாயத்தில் குறிப்பாக விசுவகர்ம சமுதாயத்தில் ஆண்வழி சமுதாயம், பெண்வழிச் சமுதாயம் என்ற பிரிவு ஒற்றுமைக்கு வேட்டு வைப்பதாகவும். சமுதாய நல்லுறவை குலைப்பதாகவுமுள்ளது. ஒரு மனிதன் 23 சோடி நிறமூர்த்தங்களால் ஆக்கப்பட்டவன். ஒவ்வொரு சோடியிலும் ஒவ்வொன்றும் தாய் வழியாகவும் தந்தை வழியாகவும் கிடைத்தது. தந்தையின் பெயரை தலைப்பெயராக இடல் பொய்யும் வழிவும் தோன்றாதிருக்கவே. ஆண் பிள்ளைகள் பெற்றோருடன் வாழுபவர்கள். பெண்பிள்ளைகள் வேறு இடங்களில் வாழச் செல்பவர்கள். ஆகவே தான் ஆண்பிள்ளைகள் தென்புலத்தாரின் கடமைகளை ஆற்றுகிறார்கள். ஆண், பெண் இருவரும் சமமே. ஆண், பெண் உறவு இரண்டும் சமன் என ஐந்திற இலக்கணத்தில் மயவிஸ்வகர்மா கூறியுள்ளார்.

எனவே அறிவு, தொழிற் பயிற்சி, அனுட்டானம், ஒற்றுமை முதலிய யாவற்றிலும் முற்போக்காகவும், ஆக்கபூர்வ மாகவும் சிந்தித்து தம் சமுதாயம் பூர்வ மேன்மையை அடைய விஸ்வகர்மப் பிராமணர்கள் முயற்சிப்பார்களாக.

**ஆக்கம்**
**இ. அச்சுதபாகன்**
**பத்திரகாளி கோயிலடி, திருநெல்வேலி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவெம்பாவை

## திருவண்ணாமலையில் அருளியது

### திருச்சிற்றம்பலம்

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
 சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாட்டடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
 மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
 போதார் அமளியின் மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனு மாகாள் கிடந்தாளென் னேயென்னே
 ஈதே எந்தோழி பரிசேலோ ரெம்பாவாய்

பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல் நாம்
 பேசும்போ தெப்போதிப் போதா ரமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
 சீசி இவையுஞ் சிலவோ விளையாடி
ஏசு மிடமீதோ விண்ணோர்க ளேத்துதற்குக்
 கூசுமலர்ப்பாதந் தந்தருள வந்தருளுந்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
 ஈசனார்க் கன்பார்யாம் ஆரேலோ ரெம்பாவாய்.

முத்தன்ன வெண்ணகையாய் முன்வந் தெதிரெழுந்தென்
 அத்தனா னந்தன் அமுதன்என் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
 பத்துடையீர் ஈசன் பழவடியீர் பாங்குடையீர்
புத்தடி யோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
 எத்தோ நின் அன்புடைமை எல்லோம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நஞ்சிவனை
 இத்தனையும் வேண்டும் எமக்கேலோ ரெம்பாவாய்.

ஒண்ணித் திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ
 வண்ணக் கிளிமொழியார் எல்லோரும் வந்தாரோ
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
 கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உண்ணெக்கு நின்றுருக யாம்மாட்டோம் நீயேவந்து
எண்ணிக் குறையில் துயிலேலோ ரெம்பாவாய்.

மாலறியா நான்முகனுங் காணா மலையினைநாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலுறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மை ஆட்கொண்டருளிக் கோதாட்டுஞ்
சீலமும் பாடிச் சிவனே சிவனேஎன்று
ஓலம் இடி னும் உணராய் உணராய்காண்
ஏலக் குழலி பரிசேலோ ரெம்பாவாய்.

மானேநீ நென்னலை நாளைவந் துங்களை
நானே யெழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறுமெமக்கும்
ஏனோர்க்குந் தங்கோனைப் பாடேலோ ரெம்பாவாய்.

அன்னே இவையுஞ் சிலவோ பலஅமரர்
உன்னற் கரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னாவென் னாமுன்னம் தீர்சேர் மெழுகொப்பாய்
என்னானை என்னரையன் இன்னமுதென் றெல்லோமும்
சொன்னோங்கேள் வெவ்வேறாய் இன்னந் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோர் ரெம்பவாய்

கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும்
ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ
வாழியீ தென்ன உறக்கமோ வாய்திறவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனையே பாடேலோ ரெம்பாவாய்.

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்ற உன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எங்கணவ ராவர் அவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே எமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோமேலோ ரெம்பாவாய்

பாதாளம் ஏழினும் கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே
பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணும் துதித்தாலும்
ஓத உலவா ஒருதோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன்தன் கோயிற் பிணாப்பிள்ளைகாள்
ஏதவன் ஊர் ஏதவன்பேர் ஆருற்றார் ஆரயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலோ ரெம்பாவாய்

மொய்யார் தடம் பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோங்காண் ஆரழல்போற்
செய்யவெண் ணீறாடி செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயாநீ ஆட்கொண்ட ருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பாய் எமையேலோ ரெம்பாவாய்.

ஆர்த்த பிறவித் துயர்கெடநாம் ஆர்த்தாடும்
தீர்த்தனற் றில்லைச் சிற் றம்பலத்தே தீயாடும்
கூத்தனிவ் வானுங் குவலயமும் எல்லோமும்
காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்பப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனைநீ ராடேலோ ரெம்பாவாய்

பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கள் மலங்கழுவ வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்துநம்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல் பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்.

காதார் குழையாடப் பைப்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம் பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோ ரெம்பாவாய்.

ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவான் சித்தங் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத் தான்பணியாள்
பேரரையற் கிங்ஙனே பித்தொருவர் ஆமாறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்.

முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா வெங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள்நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோ ரெம்பாவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செங்க ணவன் பால் திசைமுகன் பால் தேவர்கள் பால்
எங்கும் இலாததோர் இன்பம்நம் பாலதாக
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல் பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்.

அண்ணா மலையான் அடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ றற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாமகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக்
கண்ணார் அமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணேயிப் பூம் புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்.

உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கல மென்
றங்கப் பழஞ்சொற் புதுக்குமெம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போங்கேள்
எங்கொங்கை நின்னன்ப ரல்லார்தோள் சேரற்க
எங்கை உனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
கங்குல் பகலெங்கண் மற்றொன்றுங் காணற்க
இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயி றெமக்கேலோ ரெம்பாவாய்.

போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றியெல் லாவுயிர்க்குந் தோற்றமாம் பொற்பாதம்
போற்றியெல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றி யெல்லாவுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றிமால் நான்முகனுங் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீ ராடேலோ ரெம்பாவாய்.

**திருச்சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சவிருட்சம்

சின்னத்தம்பி + ஆச்சிமுத்து
↓
அன்னரத்தினம்

சின்னத்தம்பி + தையல்நாயகி
↓
தம்பிராசா

**அன்னரத்தினம்**
**+**
**தம்பிராசா**

- கோபாலகிருஷ்ணன் + திலகவதி
  ↓ தக்ஷாமினி
- கதிர்காமநாதன் + தர்மபூபதி
  ↓ நிறஞ்சன், வினோஜன், கார்த்திகன்
- தேவராணி + தர்மகுமார்
  ↓ அருண்சாந், ஷாழினி, லாகினி
- கணேசலிங்கம் + உதயராணி
  ↓ ஆரபி, மயூரன்
- சிவராணி + தேவபாலன்
  ↓ ஆதித்தியா, மதுரிகா, தேனுகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்




எம்மையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்தி விட்டு எங்கள் தெய்வம் மீளாத்துயில் கொண்ட வேளையில் ஓடோடி வந்து ஆறுதல் கூறி துயரில் பங்கு கொண்டோருக்கும், இறுதிச் சடங்கில் பங்கு கொண்டோருக்கும் தந்தி, தபால், மூலமும் தொலைபேசி மூலமும் தமது அனுதாபங்களை வெளியிட்டோருக்கும் எல்லாவிதமாக ஒத்தாசை புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் யாவர்க்கும் எமது உளங் கனிந்த நன்றியறிதலை தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்னும் எம் அன்னையின் உடல்நிலை மோசமடைந்த வேளையில் வைத்திய உதவியை நல்கிய வராகி வைத்தியசாலை டாக்டர் பாலமுருகா அவர்கட்கும் இறுதியாக நிகழ்விலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் கலந்து கொண்டோருக்கும் இந்நினைவு மலரை அழகுற அச்சிட்டுத்தந்த ஹரிஹணன் பிறிண்டேர்ஸ் நிறுவனத்தினருக்கும் எமது நன்றிகளை நவில்கின்றோம்.

நன்றி



**இவ்வண்ணம்**
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்ற லரிது.

காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது.

பயன் தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
நன்மை கடலிற் பெரிது.

தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்தெரி வார்.

உதவி வரைத்தன்று உதவி உதவி
செயப்பட்டார் சால்பின் வரைந்து.

மறவற்க மாசற்றார் கேண்மை துறவற்க
துன்பத்துள் துப்பாயார் நட்பு.

எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கண்
விழுமந் துடைத்தவர் நட்பு.

நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
அன்றே மறப்பது நல்லது.

கொன்றன்ன இன்னா செயினும் அவர்செய்த
ஒன்றுநன்று உள்ளக் கெடும்.

எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு.

Harikanan Printers,424, K.K.S Road, Jaffna,
T.P:021-2222717

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org